[1979 ஏப்ரல் 19

இணைப்பு V

[...547 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 49

பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு. 1979–80

ரூ. 4.78 லட்சம்.

தாங்களாகவே ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள குமுடியாத நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கமே சில திட்டங்களை நிறைவேற்றி அவற்றிற்கு தேவைப்படும் தண்ணீரை வழங்கி வருகிறது. இத்திட்டம் ஏப்ரல் 1971-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பயன்பெறுவோரிடமிருந்து இந்த முதலீட்டுக்கு ஈடு செய்யும் வகையில் முறையான விகிதத்தில் தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பின்வரும் திட்டங்கள் இப்போது நடைமுறையில் உள்ளன.

விரிசை எண்.	திட்டத்தின் பெயர்.
1.	பாதுகாப்புத் தொழிற்சாலை ஆவடி, குடிநீர் வழங்கு திட்டம்.
2.	துத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் குடிநீர் திட்டம்.
3.	திருச்சிராப்பள்ளியிலுள்ள சிறு ஆயுதங்கள் தொழிற் கூடத்திற்கான நீர் வழங்கு திட்டம்.
4.	துத்துக் குடியில் 20 மில்லியன் காலன் குடிநீர் வழங்கு திட்டம்.
5.	வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி நீர் வழங்கு திட்டம்.

9179 ஏப்ரல் 19]

இவைகளில் முக்கிய திட்டமான 20 மில்லியன் காலன் நீர் வழங்கும் தூத்துக்குடி திட்டம் ஏறத்தாழ முடிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகிறது. (அ) அனல் மின் நிலையத்திற்கும், தூத்துக்குடி இரசாயனக் கலவை நிலயத்திற்கும் முக்கிய கிளை குழாய்கள் நிறுவுதல்; (ஆ) பிளாஸ்டிம் க் ெ. ன் இரசாயன தொழிற்சாலைக்கு முக்கிய கிளை குழாய்கள் நிறுவுதல் மற்றும் (இ) பணியாளருக்கான இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்ட நிறைவேற்றத் திற்காக 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 4.77 இலட்சத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆவடியிலுள்ள பாது காப்பு தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கு திட்டத்திற்காக 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 1,000 அடை யாள ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளது.